முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1341

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.06.2023, வியாழக்கிழமை

1. பிரம்ம ஞானமே அரங்கா வாழ்க
பிரம்ம சூட்சுமமே தேசிகா வாழ்க
வரம்பல பெற்று என் சக்தியாக
வையகத்தைக் காக்கின்ற மாதவராஜனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 18 ம் நாள், 01.06.2023, வியாழக்கிழமை)
தாழ்வில்லா அரங்கன் பிரணவக்குடில்
தரணியோர்க்கு தனிப்பெரும் கைலாயமாகும்
3. ஆகவே அரங்கனை அணுகி
ஆறுமுகா அரங்கா என வேண்டி
ஜெகத்தோர் ஜெபதபங்கள் புரிய
சித்திதரும் பிரணவக்குடிலை ஒருமுறையேனும்
4. முறையாக உலகோர் வந்து வணங்கி
உண்மைபட அரங்கன் வழி தீட்சை பெற்று
குறையில்லா அருளமுது உண்டு செல்ல
குவலயத்தார்க்கு இனிபிறவா சித்தி கிட்டும்
5. சித்தி கிட்ட அரங்கன் சித்துக்களை
சூட்சுமமாய் தர்மமாய் வழங்கிவர
உத்தம நிலை அறிந்து உலக மக்கள்
உயர் தொண்டர்கள் அனைவரும் சரணாகதி
6. சரணாகதிகொண்டு அரங்கன் பேரிலே
சாற்றிடுவேன் சற்குருவே எனத் தொடர்ந்து வணங்கிவர
வருகவே வையகத்தில் மாற்றம்
வந்தடையும் ஞான சூட்சும ஆட்சிக்காலமாக
7. காலமாக சடுதி கனிந்து உலகில்
கண்டுரைப்பேன் பாதுகாப்பு மிகுதியாகி
ஞாலமதில் எங்கும் இயற்கை வளம்பலம்
எல்லா துறைகளும் வளர்ச்சி கண்டு

8. கண்டுமே அரங்கன் ஆசியாலே
கலியுகத்தில் ஞான ஆட்சிக்காலமாக
தொண்டுள்ளம் கொண்டவர்கள் தலைமை பெருகி
தூயஞான பாதுகாப்புமிக்க லோகமாக உலகம் மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—